**40. அந்தணன்மாண்ட கதை**

ஓர் அந்தணன் ஓர் அரசிளங்குமரிக்குக் கல்வி கற்பித் துக்கொண்டிருந்தான். அவள் அந்தணனிடத்தில் கல்வியை நன்கு கற்றுக்கொண்டாள். அவள் பருவமடைந்த வுடன்ஆசிரியனாகிய அந்தணனுக்கு ஓதுவித்த கூலியைக் கொடுத்துவிட்டுக் கல்வி கற்பதை நிறுத்திக்கொள்ள முடிவுசெய்தாள். ஒருநாள் அந்தணனுக்கு நிரம்பப் பொருள் வழங்கித் தன்னுடைய எண்ணத்தைக் கூறினாள். அரசிளங்குமரியின் அழகு அந்தணனுடைய அறிவை அழித்துவிட்டது. அவன் அவளிடத்தில் தீய எண்ணங்கொண்டான். "நீ என்னுடைய கருத்துக்கு இணங்குவதே உனக்குக் கல்வி கற்பித்த கூலியாகும்" என்றான். இதனைக் கேட்ட மங்கை சினங்கொண்டாள். "இத்தகைய கொடிய எண்ணத்தை விட்டொழிப்பாயாக" என்றுகூறிவிட்டு அவ் விடம் விட்டுப்போய் விட்டாள். இதனைக்கேட்ட அந்தணன் "என் கருத்துக் கிணங்காதஉனக்குச் சரியான பாடங் கற்பிக்கிறேன்" என்று கூறிக்கொண்டு புறப்பட்டான். அந்தணன் நேரே அரசனிடஞ்சென்று, 'தங்களுடைய மகள் பெரிய பெண்ணான நேரம் பொல்லாததாக இருக் கிறது. அவள் தங்களோடுஇருப்பாளாயின் தங்களுடைய நாடு தங்கள் கையைவிட்டு நீங்கிப் பகைவர்களிடம் போவது உறுதி. ஆகவேதாங்கள் நலமடைய விரும்பினால் அவளை உடனே துறக்கவேண்டும்' என்று கூறினான். அரசன் அவ்வளவு அறிவாளியல்லன். பின்னறிவு உள்ளவன். யார் எதைச் சொன்னாலும் அதனை அப்படியே நம்பி விடக்கூடிய இயற்கையுள்ளவன். அந்தணன் கூறியதை அவன் அப்படியே நம்பினான். "இதற்கு யாது செய்ய லாம்?" என்று அந்தணனைக் கேட்டான். அந்தணன் தன்னுடைய எண்ணம் நிறைவேறி விடும் என்று மகிழ்ந்தான். "ஒருபெட்டியில் வைத்து மூடி ஆற்று நீர்ப்பெருக்கிலே விட்டுவிடுங்கள்" என்று கூறினான். மடையனான மன்னன் மறையவன் கூறியபடியே மாதைப் பேழை, யில் அடைத்து ஆற்றில்விடுமாறு செய்துவிட்டான். மறுநாள் பெட்டி ஆற்றில் மிதந்துகொண்டு ஒரு காட்டு வழியே சென்றது. அங்குவேட்டையாட வந்திருந்த இளவரசன் தன்னுடைய ஆட்களைவிட்டுப் பெட்டியைக் கரை யேற்றச்செய்து திறந்துபார்த்தான். பேரழகு பொருந்திய பெண்ணைப் பார்த்து வியப்படைந்தான். அவளைத் தன்னிடம் வைத்துக்கொண்டு வேட்டையில் பிடித்திருந்த புலியொன்றை அப்பெட்டிக்குள் அடைத்து ஆற்றிலே விட்டுவிட்டான். மேலும் பெட்டி மிதந்து சென்றது. அந்தணன் மனித நடமாட்டம் அதிகமில்லாத ஓரிடத்தில் பெட்டியைஎதிர் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். பெட்டி மிதந்து வருவதைக் கண்டு களிப்படைந்தான். பெட்டியைக் கரை யேற்றினான். "பெண்ணே! இப்பொழுது என்ன



சொல்லுகிறாய்?" என்று கேட்டுக்கொண்டேபெட்டியைத் திறந் தான். அதற்குள்ளிருந்த புலி அந்தணனை அடித்துக் கொன்று தின்றது. அவ்வந்தணன்நிரயத்தையடைந்தான். "மதியிலா மறையோன் மன்னன் மடந்தையை வேட் [கையாலே ருதுவது காலந்தன்னில்தோடமென் றுரைத்தே [யாற்றில் புதுமையாய் எடுத்தபோது பெட்டியில் புலிவாயாலே அதிருடன் கடியுண் டன்றேஅருநர கடைந்தான்.

[மாதோ" (விவேக சிந்தாமணி) வீண் அவாவினால் உயிரிழப்பு}